DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 149/2024** |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : ஆர்.சுப்பையா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 07.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 7th **November 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செயயப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சென்னை மாநகர காவல் நுண்ணறிவு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.08.2013ம் தேதி காலை 9.15 மணிக்கு சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்தபோது பட்டமுத்து என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைகேற்ப சின்னகோவிலான்குளம் காவல்நிலையக்குற்ற எண்.117/2013 ச/பி. 279,304(ஏ) இதச படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.4 ஆகவும், முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த

இறந்துபோன வெள்ளையம்மாள் என்பவரின் உடலை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணயை 10.00 மணிக்கு ஆரம்பித்து 11.30 மணிக்கு முடித்து முதல்நிலைக்காவலர் தங்கதுரையை பிரேத பரிசோதனைக்காக அனுப்பிவைத்தேன். பிரேதபரிசோதனைக்கு பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு அவரை பணித்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 12.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சண்முகவேல் மகன் முத்துக்குமார் மற்றும் சங்கரய்யா மகன் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் பட்டமுத்து, சங்க்ரராஜ், அய்யாத்துரை, குருசாமி, சங்கரநாராயணன், மாசாணம் செட்டியார், சண்முகவேல் மகன் முத்துக்குமார் மற்றும் சங்கரய்யா மகன் முத்துக்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் சாட்சிகள் சிவனய்யா, முத்துராமன், தங்கதுரை ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். 26.08.2013 ம் தேதி நிலையம் ஆஜரான எதிரி அரிச்சந்திரனை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். அன்றைய தினமே விபத்துக்குள்ளான வாகனத்தை சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து ஆய்வாளருக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் வழக்கு மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**